
# நற்றமிழ்க்குடில்

மாணவ இலக்கிய இதழ்

குடில் : 1 விருந்து : 2



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

15.10.2018

# நற்றமிழ்க்குடில

| | |
|---|---|
| ஆசிரியர்கள் : | கு.பாரதி<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br>வே. குணசேகரி<br>இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு |
| இணையாசிரியர்கள் : | மு.துர்கா<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br>அ. ஸ்டெல்லாமேரி, அ. பர்ஸானா<br>ஆ. வள்ளி<br>இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| துணையாசிரியர்கள் : | மு. சத்யா<br>முதுகலைத் தமிழ் முதலாமாண்டு<br>சா. யோகேஸ்வரி,<br>அ. உமா மகேஸ்வரி<br>இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு |
| ஆலோசனைக் குழு : | டாக்டர் சேதுகுமணன்<br>கல்லூரித் தலைவர்<br>முனைவர் ம. சம்ஷாத்<br>கல்லூரி முதல்வர்<br>பேராசிரியர் சே. கண்மணி<br>தமிழ்த்துறைத் தலைவர் |

தமிழ்த்துறைப் பேராசிரியர்கள்


வெளியீடு : சோகா தமிழ்ப்பேரவை

நாள் : 15.10. 2018

## உள்ளே....

தலையங்கம்

கவிதைச் சாரல்

நூலறிவோம்

கட்டுரைப் பூ

அருந்தமிழ் அறிவோம்

தோழிக்குக் கடிதம்

சொல்லோடு விளையாடு

அறிவோம் அறிஞர்களை

மேற்கோள் அறிவோம்

பழங்கதை கேளு

சித்திரச் சிறுகதை

சிரிப்போ சிரிப்பு

தனித்தமிழ்ச் சொற்கள்

துறை நிகழ்வுகள்

# தலையங்கம்

ஏவுகணை நாயகன்

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானி, தொழில்நுட்ப வல்லுநர், இந்தியாவின் பதினோறாவது குடியரசுத்தலைவர், விஞ்ஞான வளர்ச்சியின் தந்தை, அற்புதமான பேச்சாளர், இந்திய இளைஞர்களின் முன்மாதிரி எனப் பன்முகத்திறன் கொண்ட ஒரு முகம் ஆ.பெ.ஜெ.அப்துல்கலாம் அவர்களின் பிறந்தநாள் இன்று. இந்நாளில் அவரைப் பற்றியச் சில துளிகள் வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சிக் கொள்கிறது நற்றமிழ்க்குடில்.....

எதிர்க்கால இந்தியாவை நோக்கிய பரந்த சிந்தனையும், சிறந்த கொள்கையையும் கொண்டவர். நம்நாடு வல்லரசாக வேண்டும் என்பதற்கு அவர் பெரிதும் நம்பியது இளைஞர்களையே. இளைஞர்களின் சக்தியே நாட்டின் முன்னேற்றத்தைத் தாங்கிப் பிடிக்கும் தூண்கள் என்பது அவரின் கருத்து.

இந்தியாவை வல்லரசு நாடாகக் கலாம் ஐயா காண விழைந்த கனவு ஆண்டு 2020. "நான் இளைய வயதினருடன் குறிப்பாக உயர்நிலைப் பள்ளி மாணவர்களுடன் இருக்கும் போது நிறைவாக உணர்கிறேன்" எனக் கூறியவர்.

வாழ்க்கையில் . மிகப்பெரிய லட்சியம் வேண்டும். சிறு லட்சியம் குற்றம் ஆகும். அறிவைத் தேடித்தேடிப் பெறவேண்டும். தோல்வி மனப்பான்மைக்குத் தோல்வி கொடுத்து வெற்றிபெற வேண்டும். இலக்கில் உறுதிகொண்டு செயல்பட எப்பொழுதும் தன் வலிமையான பேச்சின் மூலம் வலுசேர்த்தவர் கலாம் ஐயா. இளைஞர்களை நோக்கிய அவரது இடையறா பயணத்திற்குக் காரணம் அவரின் தொலைநோக்குப் பார்வை. அடித்தளம் சரியாக இருந்தால்தான் கட்டமைப்புச் சரியாக இருக்கும் என எண்ணியே இந்தியாவின் அடித்தளமான இளைய சமுதாயத்தை நாடினார்.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" எனும் பழமொழியை நினைவுறுத்துவதாகவே கலாம் ஐயாவின் வழிகாட்டல் அமைவதை உணரலாம். இளைய சமுதாயத்தினரின் துணையால் திறமையான, வெளிப்படையான, நிர்வாகமும் அப்பழுக்கற்ற ஊழலற்ற, ஆட்சியும் கொண்டுவர இயலும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இந்தியாவில் இதை நிறைவேற்ற இளைஞர்களுக்கு ஊக்குவித்தல் மட்டுமன்றி சிறந்த வழிகாட்டுதலும் தேவைப்படுகிறது.

எம்முயற்சியிலும் புதுமை, சிறந்த உத்வேகம், கல்வியறிவு தொழில்நுட்பத்திறன் இவையாவும் இன்றைய இளைய சமுதாயத்திடம் இருப்பினும் அரசியல் வலையில் சிக்குவோமோ என அஞ்சி வலைதளத்தில் சிக்கி கல்வி, பணி எனப் பயணத்தை ஒரு முகமாகத் தன்னைச் சார்ந்ததாகவே மாற்றிக் கொள்கின்றனர்.

அரசியல் துறையிலும், திரைப்படத் துறையிலும் இல்லாத ஒரு தனி மனிதனால் மக்களின் இதயத்தில் இன்றளவும் நீங்காத இடம் பிடிக்க முடியும் எனில் அது அப்துல் கலாம் ஒருவருக்கேச் சாத்தியம். "எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்" இளைஞர்களின் நாட்டு வளர்ச்சி நோக்கிய பாதை வளமான இந்தியாவை உருவாக்குவதோடு பிறநாடுகளின் முன்னிலையில் இந்தியாவின் தரத்தை உயர்த்தும்.

இளைஞர்களின் எழுச்சிநாளான இன்று அவரது வல்லரசு கனவினை ஏற்று அதற்கான முயற்சியில் ஈடுபடுவதே நாம் அப்பெருமகனார்க்குச் செய்யும் கடமை ஆகும். அவரது கனவினை நிறைவேற்ற இயன்றதைச் செய்வோமாக................

வே.குணசேகரி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## மரபுக் கவிதை

### வெண்பா

முத்தில் பிறந்து வந்த முத்தே தமிழ்மொழியின்
சொத்தே திராவிடத்தின் ஞாயிறே - எத்துறையில்
முத்திரை இல்லையுனக்கெந் தமிழ்த்தாய் ஈன்றெடுத்த
புத்திரனே கருணா நிதி.

வே. குணசேகரி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

### நேரிசை வெண்பா
### அம்மா

ஒழுக்கத்தின் நன்மையைக் கூறிய அன்னை
உழைத்து வாழும் பண்பைப் பயிற்றி - மொழியுணர்த்தி
அறத்தைப் புகட்டிஎன் அச்சம் விலக்கி
பிறவி வரமளித் தாள்

மா. ரூபிணி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## மீண்டும் தமிழனாக...

என்னவென்று சொல்வேன் அம்மா!
தமிழனாக யான் பிறந்த இன்பத்தை...
பிறவி ஒன்று போதுமா
இன்தமிழைப் போற்றிட....?

தமிழின் பெருமைக்குத்
தரணியில் முடிவு உண்டோ?
அன்னைத் தமிழின்
ஆற்றல் பற்றி யான் கூறிட...
இன்னும் பிறவி பல
எடுத்திடல் வேண்டும் அம்மா!

என் தமிழைச் சுவைத்திட
தமிழ்த்தாயின் கருவறையில்
மீண்டும் தமிழனாக நான்!

சே. ஜெயஸ்ரீ
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## கல்வி

கல்வி எம் வாழ்வின்
அறிவுச் செல்வி!

வற்றாத வளம்தரும்
பொற்களஞ்சியம் நீ

கற்கக் கற்கச் சுவைதரும்
கற்கண்டு நீ

உன்னால் உயர்வேன் !!
உலகில் ஒளிர்வேன் !!

அர்ச்சனா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## தனிமை என்னை நேசிக்கும்

நான் கவலையில் இருக்கும்பொழுது
தனிமை என்னை நேசிக்கும்...
தென்றல் என்னைத் தழுவி
என் கவலையை எடுத்துச்செல்லும்....

மலர்கள் என்னை நோக்கி வரும்
சிறு பறவைகளின் ஓசையால்
மனம் மகிழத் துவங்கும்.....

அருவி ஆர்ப்பரிக்கும் நேரத்தில்
என் மனம் படகுபோல் தளரும்....

என் கவலைக்குச் சொந்தக்காரனான
தனிமை என்னை விட்டு
விலகி வானில் ஒளியும்

பா. லட்சுமி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# மழை

மரம் தந்த பரிசாய் வந்தாய்
தாகம் தீர்க்கத் தண்ணீர் தந்தாய்
விவசாயம் செழிக்கச் செய்தாய்
உயிர்கள் வாழ அமிழ்தம் ஆனாய்

வானம் திறக்க மழையாயக் கொட்டினாய்
மடைகள் திறக்கத் தண்ணீராய் ஓடினாய்
பூக்கள் திறக்க மழைத்துளி ஆனாய்
கண்கள் திறக்க நீர்த்துளி ஆனாய்

மேகத்தின் கருவாய் வானத்தில் மிதந்தாய்
மின்னல் பூவாய் மேலிருந்து விழுந்தாய்
இன்பத்தின் ஊற்றாய் எங்கெங்கும் ஓடினாய்
சின்னக் குழந்தையின் சிரிப்பாய் நிறைந்தாய்

வெப்பத்தின் தாக்கம் குளிரால் தடுத்தாய்
விவசாயின் வேதனையைத் தோழனாய்த் துடைத்தாய்
ஆபத்திலுதவும் நண்பனாய்த் தோளைக் கொடுத்தாய்
வழிபடும் அளவிற்கு மாரியாய் உயர்ந்தாய்

உயிர்கள் உலகில் வாழ வழிசெய்தாய்
பிறகு ஏன் பேராழியாய் ஆனாய்?
காற்றோடு கலந்து வந்தாய் ‘வர்தா’வாய்
புயலாய் மாறி வந்தாய் ‘ஓகி’யாய்

நிரம்பினாய் தாகம் தீர்த்தத் தண்ணீராய்
தண்ணீருக்காயத் தவிக்கும் காலி குடங்களாய்
மழையை எதிர்பார்க்கும் நிலமாய்
வறட்சியின் விளிம்பில் தவித்தோம் சோகமாய்

வானம் மேகமூட்டத்துடன் இருந்த அறிகுறியாய்
அண்ணார்ந்து பார்த்துக் கொண்ட விழியாய்
ஏமாற்றத்தைத் தாங்காதப் பிஞ்சு மனதாய்
இருந்தும் ஏமாற்றினாய் எங்களை முட்டாளாய்...

அ. ஸ்டெல்லாமேரி,
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

## என் மனம்

துள்ளிக் குதித்து விளையாடும் மானைப் போலவே
பள்ளி சென்று விளையாட மனம் ஏங்குதே!

வண்ணத்துப்பூச்சி சிறகடித்துப் பறப்பது போலவே
சுதந்திரமாய் நானும் இன்று பறக்க வேண்டுமே!

அம்மா அப்பா தம்பி தங்கை யாருமில்லையே
அன்புக்காகச் சின்ன மனம் வாடுதே!

இறைவன் வீட்டுத் தோட்டத்து முல்லையாக
மலர்ந்திட எனக்கொரு இடம் வேண்டுமே!

சின்ன மனசு காணும் கனவு எல்லாம்
கலையாமல் நினைவாக வேண்டுமே!

அ. உமா மகேஷ்வரி
இளங்கலைத் தமிழ் முதலாமாண்டு

# நூலறிவோம்

நூலின்பெயர்: அனுத்திமிர் அடக்கு

ஆசிரியர்: அறிவுமதி

இலக்கிய விமர்சனம் என்பது அபிப்பிராயம் சொல்லிவிடுவது மாத்திரமன்று. இலக்கிய விமர்சனம் ஒரு மதிப்பீட்டின் முயற்சி என்று கூறுதலே தகும். அந்நெறியில் அறிவுமதியின் இக்கவிதை நூல் மொழியின் தனித்துவமான தாக்கவன்மையை அளித்து உணர்ச்சியைப் பெருகச் செய்கிறது.

"நிழல் கசிய நட", "குருதி திகைக்க உழை", "காற்று வியர்வை தின்ன களத்து மேட்டில் குவி" என உழவனை நினைவுறுத்தும் வரிகள் மண்ணோடு உழைப்பவர்கள் மன்றாடி மண்ணோடு மண்ணாகிறாரே தவிர, பலன் உணவு பரிமாறுவோருக்கு இல்லை புசிப்பவருக்கு மட்டுமே என்பதை உணர்த்துகின்றன.

"சலுகை வெறு", "திணித்தலை எதிர்", "மிரட்டலைச் சந்தி", "அடங்கமறு", "மூச்சு என்பது உரிமைக்குப் பிறகு" எனும் வரிகள் சலுகையை வெறுத்தலின் விளைவுகளை நமக்கு எச்சரிக்கின்றன.

"கிளறிச் சேகரி கிராமியக் கலைகள், சருகுகள்தோறும் சரித்திரம் தேடு" என நாம் மறந்து போன வலுவிழந்துப் போன நம் கலைகளையும் அவற்றிற்கிடையேயுள்ள களைகளைக் களையவும் அறிவுறுத்து கின்றன இவ்வரிகள்....

அந்நிய மொழியின் போதையில் ஆடிக்கொண்டிருக்கும் நம்மைத் "தாய்மொழிக் குடி" என பிழைத்திருத்துகின்றன ஆசிரியரின் மொழிகள்.

"தொழில்கள் துப்பும் நச்சுக்காற்று
பெருகும் வறட்சி
விரியும் பாலை
தினரும் பருவம்"

எனும் வரிகள் நாம் செய்த அநீதியைக் கண்முன் நிறுத்தி இயற்கை ஒரு நீதித்தாய் என்றே உணர்த்துகின்றன. சேதம் செய்யும் மக்களுக்குத் தேச பாதிப்புகளை உணர்த்தி அதன் பரிகாரமாய் "வாழ்க்கையை மலர்த்து... காடுகள் வளர்த்து" என இன்றைய காலத்தேவையை நமக்கு வலியுறுத்தி வாழ வழிசொல்கின்றன.

"பெண்ணைப் பேச பெண்ணே எழு" "ஆண் பெண் சுவர் இடி, நட்பில் பால் சிதை" எனும் வரலாறு பெண்ணைப் பேசவும், ஆண் பெண் நட்பில் புதிய வரலாறு படைக்கவும் செய்கிறது. தன்னைச் சுற்றி நிகழும் சகிக்க இயலா செயலுக்கும் தலைகுனிந்து அமைதிகாக்கும் மனிதத்தைப் பிரதிபளிக்கும் கண்ணாடியாக "மனிதருள் பதுங்கி மிருகம் உறுமும்" எனும் வரி அமைகிறது.

ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் ஆகியவற்றின் ஓர் கிளையாய்

"அறம் செய விரும்பு" – "கல்வியில் விடி"
"இயல்வது கறவேல்" – "நிழற் கசிய நட"

எனும் வரிகள் இடம் பெற்றிருப்பதைக் காண இயலும்.

மொத்தத்தில் இக்கவிதைத் தொகுப்பானது உணர்ச்சியின் வேகத்தை ஏவுகளம் போல மேலெழும்பச் செய்யக் காணலாம். சொல்லாழமும் கருத்தாழமும் கவிதா ஆணைகளாகவும் சமூக ஆவேசமும் அதனோடு அழகியலும் எடுத்தாளப்பட்டுள்ளன.

வரன்முறையான ஒரு சமூகக் கருத்து இக்கவிதைத் தொகுப்பை வழிநடத்துகிறது. தெரிந்தெடுத்து அடுக்கிய சமூகச் சொற்கோப்பு அறிவுமதியின் அனுத்திமிர் அடக்கு....

வே.குணசேகரி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு.

# கட்டுரைப் பூ...

## விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு

சுமார் நூறு வருடங்களுக்கு முன்னால் 1893ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் கூடிய சர்வசமயப் பேரவை மனிதகுலத்தின் பண்பாட்டு வரலாற்றில் ஒரு இணையற்ற நிகழ்ச்சி ஆகும். வெவ்வேறு மதங்களின் சிறப்பு அம்சங்களையும் அவற்றின் வேற்றுமைகளையும் புரிந்துகொள்வது அந்தப் பேரவையைக் கூட்டியவர்களின் நோக்கமாக இருந்தது. எந்த மதத்தையும் விலக்காமல் சொந்தமாக்கிக் கொள்கின்ற பரந்த இந்து மதத்தின் பிரிதிநிதியாக இந்தியாவிலிருந்து ஒரு துறவி அந்தப் பேரவையில் கலந்துகொண்டார். அவர்தான் **சுவாமி விவேகானந்தர்** அவரே அந்த பேரவையில் முதன்மையாகவும் திகழ்ந்தார்.

**சிகாகோ சர்வசமயப் பேரவை**

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த நானூறாம் ஆண்டு விழாவைக் கொண்டாடும் வகையில் மாபெரும் கண்காட்சி ஒன்று அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்டது. சுமார் 4000 பேர் அமரக்கூடிய கலைக்கூடத்தில் சர்வசமயப் பேரவை காலை 10 மணிக்கு ஆரம்பித்தது. உலகின் முக்கியமான பத்து மதங்களின் பிரதிநிதிகள் அதில் பங்குபெற்றனர். இந்தியப் பிரதிநிதியான சுவாமி விவேகானந்தர் சிகாகோ மாநாட்டில் வரவேற்புக்கு மறுமொழி, நாம் ஏன் ஒத்துப் போவதில்லை, இந்து மதம், மதம் இந்தியாவின் அவசரத் தேவையன்று,புத்த மதம் இந்து மதத்தின் நிறைவு, நிறைவு நாள் உரை என ஆறு சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். இவற்றில் சிலவற்றை விரிவாகக் காணலாம்.

வரவேற்புக்கு மறுமொழி

சுவாமிஜியின் முதல் சொற்பொழிவு செப்டம்பர் 11ஆம் நாள் நடைபெற்றது. அமெரிக்கச் சகோதரிகளே, சகோதரர்களே! என்று தம் சொற்பொழிவைத் தொடங்கினார். பிறசமயக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்குப் புகட்டிய மதத்தைச் சார்ந்தவன் நான் என்பதில் பெருமையடைகிறேன். எதையும் வெறுக்காமல் மதிக்க வேண்டும் என்னும் கொள்கையை நாங்கள் நம்புவதோடு எல்லா மதங்களும் உண்மை என்று ஒப்புக் கொள்கிறேன் என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

நாம் ஏன் ஒத்துப் போவதில்லை

இரண்டாவது சொற்பொழிவு நாம் ஏன் ஒத்துப்போவது இல்லை செப்டம்பர் 15ஆம் நாள் நடைபெற்றது.

நான் ஒரு கதை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். ஒரு கிணற்றில் தவளை ஒன்று வாழ்ந்தது. நீண்ட காலமாக அங்கு அது வசித்து வந்தது. அந்தத் தவளை நாள்தோறும் நீரிலிருந்து புழு பூச்சிகளையும் கிருமிகளையும் சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப் படுத்துகிறது. அவ்வாறே வாழ்ந்ததால் அந்தத் தவளை சிறிது பருத்துவிட்டது. ஒருநாள் கடலில் வாழ்ந்து வந்த தவளையொன்று அங்கு வந்து அந்தக் கிணற்றில் விழுந்தது.

| | | |
|---|---|---|
| கிணற்றுத்தவளை | : | நீ எங்கிருந்த வருகிறாய்? |
| கடல் தவளை | : | கடலிலிருந்து.. |
| கிணற்றுத்தவளை | : | கடலா? அது எவ்வளவு பெரியது? எனது கிணற்றைவிட பெரியதாய் இருக்குமோ? |
| கடல் தவளை | : | சேச்சே! என்ன முட்டாள் தனம்! கடலை கிணற்றோடு ஒப்பிடுவதா? |

கிணற்றுத்தவளை : நீ என்ன சொல்கிறாய் சரி என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்கமுடியாது. இவன் பொய்யன்.

காலம் காலமாக இருந்துவரும் சண்டை இதுதான்! ஒரு ...நு தன் சிறிய கிணற்றில் இருந்துகொண்டு அதுதான் முழுஉலகம் என்று நினைக்கிறான். இப்படியே எல்லா மதங்களும் ...ன் சிறு கிணறுதான் முழுஉலகம் என்று நினைக்கிறார்கள். நமது ...ந்தச் சிறிய உலகின் எல்லைகளைத் தகர்த்தெறிய வேண்டும். ...ன்று கூறுகிறார் சுவாமி விவேகானந்தர்.

...றைவு நாள் உரை

விதை தரையில் ஊன்றப்பட்டு மண்ணும் காற்றும் நீரும் ...தைச் சுற்றிப் போடப்படுகின்றன. விதை மண்ணாகவோ, ...ற்றாகவோ, நீராகவோ ஆகிறதா? இல்லை, அது செடியாகிறது. ...அது வளர்ச்சி நியதிக்கேற்ப காற்றையும் மண்ணையும் நீரையும் ...னதாக்கிக் கொண்டு தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி ...ரு செடியாக வளர்கிறது.

மதத்தின் நிலையும் இதுவே கிறிஸ்தவர் இந்துவாகவோ, ...பௌத்தராகவோ மாற வேண்டியதில்லை. ஒவ்வொருவரும் மற்ற ...தங்களின் அம்சங்களைத் தனதாக்கிக்கொண்டு வாழ்தலே ...போதுமானது.

...முடிவுரை

சிகாகோ வெற்றிக்குப் பின்னர் சுவாமிஜி அமெரிக்க ...க்களின் இதயங்களில் நிறைந்துவிட்டார். சுமார் நான்கு வருடங்கள் ...அங்கே அயராது வேதாந்தக் கருத்துக்களைப் பரப்பிவிட்டு, 1897 ...ஜனவரியில் தாயகம் திரும்பினார். தாம் எண்ணியது போல ...வேதாந்தம் என்னும் அருட்செல்வத்தை மேலை நாடுகளுக்கு ...அளித்து பொருட்செல்வம் பெற்றுவந்து தமது லட்சியத்தை ...நிறைவேற்ற சுவாமிஜி உருவாக்கிய அமைப்புதான் இராம கிருஷ்ண

இயக்கம். இன்று உலகெங்கணும் பரந்து மக்களின் வறுமையைப் போக்கவும் அறியாமையை நீக்கவும், ஆன்மிக ஞானத்தை அளிக்கவும் அவர் மனதில் பற்றியெரிந்தது இந்த இயக்கம்.

சிங்கங்களே, சிறுமையெனும் கட்டுகள்
நீங்கள் ஆடுகள் என்ற மாயையை
உதறித்தள்ளுங்கள்,
நீங்கள் அழியாத ஆன்மாக்கள்
சுதந்திரமான தெய்வீகமான
நிரந்திரமான ஆன்மாக்கள்
எழுந்திரு! விழித்திரு!

என்ற வாக்கியங்களே சுவாமி விவேகானந்தர் நமக்கு வழங்கிச் சென்ற அற்புத மந்திரங்கள்.

அ. பர்ஸானா
இளங்கலைத் தமிழ் இலக்கியம் இரண்டாமாண்டு

## அருந்தமிழ் அறிவோம் !

| | |
|---|---|
| சர்வகலாசாலை | - பல்கலைக்கழகம் |
| தாபதர் | - தவம் செய்வோர் |
| கேழல் | - பன்றி |
| அகிம்சை | - ஊறு செய்யாமை |
| உளை | - பிடரி மயிர் |
| குறங்கு | - தொடை |
| பரவை | - கடல் |
| கிலி | - அச்சம் |
| வாலை | - இளம்பெண் |
| நறை | - மணம் |

உமா மகேஷ்வரி
இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு

# தோழிக்குக் கடிதம்....

அன்புள்ள தோழிக்கு,

நான் இங்கு நலம். நீ அங்கு நலமா? வீட்டில் இருக்கும் அனைவரும் நலமா? இன்று என் வீட்டருகில் ஒரு நிகழ்வு நடந்தது. அது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது. உன்னுடன் அதை பகிர்ந்துகொள்வதால் என் மனவருத்தம் குறையும் என்று நினைத்து இக்கடிதத்தை வரைகிறேன்.

என் வீட்டருகில் மாலா என்னும் சிறுமி இருக்கிறாள். அவள் சுதந்திர தினத்தன்று வீட்டின் அருகில் இருக்கும் கட்சிக் கொடிகளை எடுத்துத் தன் சட்டையில் அணிந்து கொண்டு. தன் நண்பர்களுக்கும் கொடுத்து இதுதான் தேசியக்கொடி என்று சல்யூட் செய்து மிட்டாய்களைப் பகிர்ந்துகொண்டு விளையாடினாள். அந்தக் காட்சி எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தந்தது.

இது குழந்தைககளின் விளையாட்டுதானே... இதில் வருத்தப்பட என்ன இருக்கின்றது? என நீ கேட்கலாம். எனது வருத்தம் எல்லாம் குழந்தைகளின் விளையாட்டில் அல்ல. வருங்காலத்தில் வலிமையான இந்தியாவை உருவாக்க வேண்டிய நம் சந்ததியினர் விளையாட்டில் கூட நம் தேசியக்கொடிக்கு உரிய மதிப்பினை வழங்க வேண்டும் என நினைக்கிறார்கள். அது மகிழ்ச்சியே. ஆனால் நம் தேசத்தில் தேசியக்கொடிக்கும் கட்சிக்கொடிக்கும் வேறுபாடு இல்லாத அளவிற்கு கட்சிக்கொடிகள் பல்கிப் பெருகிவிட்டதே என்பதைப்பற்றித்தான் என் வருத்தம்.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியாவில் பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம் எனப் பல்வேறு துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சியைவிட அரசியல் கட்சிகளின் வளர்ச்சிதான் அதிகமாய் உள்ளது. ஊருக்கு ஒரு கட்சி, தெருவிற்கு இரண்டு சங்கங்கள், மாதத்திற்குப் பத்து அரசியல் மாநாடுகள், சாலைப் போக்குவரத்திற்கு இடையூறாக அரசியல் தலைவர்களின் பேனர்கள், அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த கட்சிக்கொடிகள்... கட்சிக்கொடி எது? தேசியக் கொடி எதுவென்று தெரியாத அவலநிலையை இன்றைய அரசியல் கட்சிகள் கொண்டு வந்துவிட்டன.

இந்த நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அரசியலில் கட்சிகள் வளருவதைவிட நாட்டின் வளர்ச்சிக்குத் தேவையான ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் வளர வேண்டும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதனை மனதிற்கொண்டு செயல்பட வேண்டும். இளைஞர்களாகிய நாமும் தெளிவான சிந்தனையோடு விழிப்புணர்வு மிக்கவர்களாய் வளர வேண்டும். சிந்திக்க வேண்டும். வருங்கால இந்தியாவின் தூண்களாகிய இன்றைய குழந்தைகளும் தெளிந்த அறிவுடன் வளர வேண்டும்.

குழந்தைகளின் தேசியக்கொடி விளையாட்டு இந்த உணர்வினை எனக்குள் தூண்டியது. அதை உன்னுடன் பகிர்ந்துகொள்ளவே இக்கடிதத்தை எழுதினேன்.

நீயும் இதனைப் பற்றியக் கருத்துகளை எனக்கு கடிதமாக எழுது...

உன் அன்புத் தோழி...
மு. துர்கா

முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு

# சொல்லோடு விளையாடு...

இன்தமிழ்ச் சொல் நூறு... இதில் ஒளிந்திருக்கும் சொல் கூறு!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| கி | ழா | க | ர | கு | ர | வ | ண் | டி |
| ர | ணா | ண் | ம | லூ | ல் | த | ப் | ல் |
| ஓ | டி | ப் | பி | டீ | த் | த | ல் | கி |
| து | ந் | ப | ப் | ய் | பே | த | ம் | து |
| ல் | ல் | சி | ச் | கு | க் | லு | ல் | வி |
| ம் | த | யி | உ | லை | யி | சி | த | லை |
| ல் | கி | ஊ | தே | மோ | டீ | ய் | சீ | லை |
| ஊ | ய் | உ | ப் | பு | லி | ந் | ற | ல் |
| து | க | சி | ச் | கு | க் | லு | ல் | க |

ிப்பு :

ஒளிந்திருக்கும் சொற்களைக் கண்டறிவோர் அடுத்த இதழுக்கு வற்றைத் தரலாம். மிகுதியான சொற்களைத் தந்தவருடைய டைகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

கடோபர் மாத சொல்விளையாட்டுக்கான விடைகள்:

1. திங்கள்
2. பங்குனி
3. குளிர்
4. ஐப்பசி
5. வைகாசி
6. முதுவேனில்
7. சித்திரை
8. ஞாயிறு

வெ. வேதவள்ளி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# அறிவோம் அறிஞர்களை



ராஜம் கிருஷ்ணன்... 1925ஆம் ஆண்டு தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள முசிறியில் பிறந்தார். பள்ளிக்குச் சென்று முறையான கல்வி பயிலாதவர். பெண்கள் பூப்படையும் முன்பே திருமணம் செய்து வைத்துவிடும் அன்றைய சமுக வழக்கப்படி 15ஆவது வயதிலேயே அவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். திருமணத்திற்குப் பின்னர் சென்னை கிழக்குத் தாம்பரத்தில் குடியேறினார். மின்பொறியாளரான கணவரின் உதவியால் பல புத்தகங்களைப் படித்துப் பின் கதைகளை எழுத ஆரம்பித்தார்.

தமிழ் நாவல் உலகில் அவருக்குத் தனி இடம் உண்டு. பெண்களது வாழ்வை மிக நுணுக்கமாக எளிமையான தமிழ் நடையில் சித்தரித்துள்ளார். இவருடைய முதல் நாவல் 'பெண்குரல்' என்பதாகும். அவரது படைப்புகள் பரந்துபட்டவை... அவற்றுள் சில...

| | |
|---|---|
| கரிப்பு மணிகள் | முள்ளும் மலரும் |
| ஊசியும் உணர்வும் | வேருக்கு நீர் |
| குறிஞ்சித் தேன் | புதியதோர் உலகு செய்வோம் |
| பெண் விடுதலை | கோடுகளும் கோலங்களும் |


விருதுகள்

1. நியூயார்க் ஹெரால்ட் டிரிபியூன் சர்வசே விருது
2. சாகித்திய அகாடமி விருது
3. சோவியத் நாடு நேரு விருது
4. திரு.வி.க விருது

ஆ. ஜான்சி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

*மலரே...*

குறிஞ்சிப் பாட்டில்
கபிலர் குறிப்பிடும்
99 மலர்களில் ஒன்று
கரந்தை மலர்



சங்க இலக்கியங்களில் கூறப்படும் கரந்தை மலர் குறித்து நற்றமிழ்க்குடில் அறிமுகப்படுத்துகிறது. ஆநிரை மீட்க நடைபெறும் போரிலே அரசரும் வீரரும் அடையாளமாகச் சூடிய அழகிய மலர் கரந்தை.

தொல்காப்பியம் எழுவகைப் புறத்திணைகளுள் வெட்சிக்கு மாரணாயத் துறை கரந்தை என்கிறது. வெட்சி சூடி ஆநிரை கவர்வதும் கரந்தை சூடி ஆநிரை மீட்பதும் தமிழரின் போர்முறை எனப் புறப்பொருள் வெண்பா மாலை இலக்கணம் உரைக்கின்றது. கரந்தையைத் தொல்காப்பியம் துறை என்றும் புறப்பொருள் வெண்பாமாலை திணை என்றும் குறிப்பிடுவதும் இங்குச் சுட்டத் தக்கது.

சங்க இலக்கியங்கள் சுட்டும் கரந்தை மலரினை அடையாளம் காண்பதில் அறிஞர்களிடையே மாறுபாடு காணப்படுகின்றது.

- திருநீற்றுப்பச்சை என்னும் கரந்தை
- விஷ்ணு கரந்தை
- மூலிகைக் கரந்தை
- கொட்டைக் கரந்தை

என்பன அவர்கள் காட்டும் கரந்தை மலர்.

நீ. வர்ஷினி உமையாள்
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

# மேற்கோள் அறிவோம்

நூல்கள் கனித்தமிழில் அள்ளிட வேண்டும் - அதை
நோக்கித் தமிழப் பசியும் ஆறிட வேண்டும்.

- க. சச்சிதானந்தன்.

முத்தே பவளமே மொய்த்த பசும்பொற்சுடரே
சித்தென் னுள்ளத் தெளிவே பராபரமே.

- தாயுமானவர்.

கற்பிப்போர் கண்கொடுப் போரே! - அந்தக்
கணக்காயர் உரையினில் இருசெவி சேர.

- வாணிதாசன்.

நெத்தி வேர்வை சிந்தினோமே முத்துமுத்தாக - அது
நெல்மணியாய் விளைஞ்சிருக்குக் கொத்துக்கொத்தாக.

- அ. மருதகாசி.

தொகுத்தவர்
ஆ. ஸ்டெல்லாமேரி
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

*சித்திரச் சிறுகதை*

## மாற்றத்தால் மாறும் பூமி

அலுவலர் ஒருவர் கால தாமதமாக அலவலகத்திற்கு ருகிறார். அவர் காலை வேளையிலேயே உடல் வலிமை ன்றி சோர்வாகக் காணப்பட்டார். உடன் பணியாற்றும் சக ழியர் ஒருவர் கால தாமதத்திற்கான காரணத்தைக் னிவாகக் கேட்டார்...

சில நிமிடங்களுக்குப் பிறகு பெருமூச்சு விட்டபடியே பாக்குவரத்து நெரிசலே காலதாமதத்திற்குக் காரணம் என்று றினார்.

ஏன்பா சோமு... நீதான் இருசக்கர வாகனம் வெத்திருக்கிறாயே? சாலையின் இடுக்குகளில் நுழைந்து ந்துவிடுவதுதானே?

நீ சொல்றது சரிதான் ராமு... ஒரு சில நேரம்தான் ப்படி வாய்ப்பு கிடைக்கும்... பல நேரம் அதற்கு வாய்ப்பே ருக்காது.

ஆமாம்... ஆமாம்... அதுவும் சரிதான். சாலையில் பாக்குவரத்து நெரிசலே இருக்கக் கூடாது என்றால் பாதுமக்கள் அனைவரும் நடராஜா சர்வீஸ்ல தான் ரணும்...

பேருந்து, மோட்டார் பைக், கார் என எதுவும் வண்டாம். மிதிவண்டி மட்டுமே பயன்பாட்டில் இருக்க வண்டும். ஆஹா... எப்படி இருக்கும் இந்த உலகம்?

## மாற்றத்தால் மாறும் பூமி

அலுவலர் ஒருவர் கால தாமதமாக அலவலகத்திற்கு ருகிறார். அவர் காலை வேளையிலேயே உடல் வலிமை ன்றி சோர்வாகக் காணப்பட்டார். உடன் பணியாற்றும் சக ழியர் ஒருவர் கால தாமதத்திற்கான காரணத்தைக் ணிவாகக் கேட்டார்...

சில நிமிடங்களுக்குப் பிறகு பெருமூச்சு விட்டபடியே பாக்குவரத்து நெரிசலே காலதாமதத்திற்குக் காரணம் என்று றினார்.

ஏன்பா சோமு... நீதான் இருசக்கர வாகனம் வெத்திருக்கிறாயே? சாலையின் இடுக்குகளில் நுழைந்து ந்துவிடுவதுதானே?

நீ சொல்றது சரிதான் ராமு... ஒரு சில நேரம்தான் ப்படி வாய்ப்பு கிடைக்கும்... பல நேரம் அதற்கு வாய்ப்பே ருக்காது.

ஆமாம்... ஆமாம்... அதுவும் சரிதான். சாலையில் பாக்குவரத்து நெரிசலே இருக்கக் கூடாது என்றால் பாதுமக்கள் அனைவரும் நடராஜா சர்வீஸ்ல தான் ரணும்...

பேருந்து, மோட்டார் பைக், கார் என எதுவும் வண்டாம். மிதிவண்டி மட்டுமே பயன்பாட்டில் இருக்க வண்டும். ஆஹா... எப்படி இருக்கும் இந்த உலகம்?

இரைச்சலற்ற ஒலிகள், நச்சுக் காற்றும் மாசு நிறைந்த காற்றும் கரைந்து நல்ல தூய்மையான காற்றைச் சுவாசிப்போம். சாலை நெரிசலே ஏற்படாது. நிம்மதியான அமைதியான வாழ்வை வாழலாம்.

ஆமாம்.. ஆமாம்.. நீ இப்படியே கற்பனை செஞ்சிகிட்டு இரு சோமு... இனிமே அலுவலகத்துக்கு மிதிவண்டியிலேயே வா? இப்போ அரை மணிநேரம் தான் தாமதமா வர... அப்புறம் நாங்க எல்லாம் வேலை முடிஞ்சி விட்டுக்குப் போயிட்ட பிறகுதான் நீ அலுவலகத்துக்கு வருவ.

ஆமாம் ராமு... நீ கால தாமதம் என்னும் குறையை மட்டுமே யோசிக்கற... அதிலுள்ள நிறையைப் பற்றி நினைக்க மாட்ற... மிதிவண்டி மிதிப்பதால் உடல் ஆரோக்கியம் பெறும். எந்த நோயும் நம்மை எட்டிக் கூட பாக்காது. மாசு என்னும் சொல்லே மடிந்துவிடும். மிதிவண்டியைவிட மிகச்சிறந்தது நடந்தே செல்வது. உடல் எடை குறையும். நீரிழிவு நோயே இருக்காது.

ஆமாம் சோமு... எரிவாயு மிச்சம். இரைச்சல் குறையும் இந்த இரைச்சலால்தான் பாதி தலைவலியே... அதைவிட இப்போல்லாம் நாம வாங்கற சம்பளத்துக்கு வண்டிக்குப் பெட்ரோல் போட முடியுதா?

அட போப்பா... இன்னும் கொஞ்ச நாள் போனா வண்டிய வித்துத்தான் பெட்ரோல் போடனும்...

ராமு சொல்றது சரிதான் நாம இப்போலாம் பக்கத்துக் கடைக்குப் போறாதா இருந்தா கூட பைக் எடுத்துக்கிட்டு தானே போறோம்.

நாமும் இந்த நிலையை மாத்த கொஞ்சம் யோசிக்கனும். பக்கத்தில் இருக்கிற வேலைகளைச் செய்யப் போகும் போதாவது நடந்து போகப் பழகனும். அலுவலகம் போகும்போது பெரும்பாலும் பேருந்து அல்லது ரயிலைப் பயன்படுத்தினா நல்லா இருக்கும்.

ம்... மாசு இல்லாத புகை இல்லாத நோய் இல்லாத ஓர் உலகம் நல்லாதான் இருக்கும்.

"மாற்றத்தால் மாறும் பூமி"

க. ரம்யபாரதி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

*சிரிப்போ சிரிப்பு...*

அய்ய்ய் குட்டிப் பையா... சட்ட சூப்பரா இருக்கு... தீபாவளிக்கு எடுத்ததா?

இல்ல... எனக்கு எடுத்தது.

...

நாங்க ஏழுபேர் ஒரே குடையைப் பிடிச்சிக்கிட்டு போனோம் ஆனா யாருமே நனையல...

அதெப்படி?

அப்போதான் மழையே பெய்யலையே...

அ. பர்ஸானா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

உற்றார் தின்றால் புற்றாய் விளையும்

ஊரார் தின்றால் பேராய் விளையும்

உறவினர்களுக்கு உணவிட்டால் விட்டைச் சுற்றி எறும்புப் புற்றுதான் வளரும் அதுவே, ஊராருக்குச் சோறிட்டால் அது நமக்கு நல்ல பெயரைத்தரும் என்பது இப்பழமொழியின் பொருள்

உறவுக்கு விருந்திடுவது அறமாகாது ஏழை எளிய மக்களின் வயிறார உணவிடுவதே உண்மையான அறமாகும் என்பதை இப்பழமொழி மிக அழகாய் வலியுறுத்துகிறது

தென்னை மரத்தில் தேள்கொட்டினால்

பனைமரத்தில் நெறிகட்டும்

தென்னை மரத்தில் ஏறுபவர்கள் பூச்சிக் கடிகளால் பாதிப்பு வராமல் இருக்க ஒரு விதமான எண்ணெய் அல்லது சாந்தை உடலில் பூசிக்கொண்டு மரம் ஏறுவார்கள் அப்படி ஏறும்போது மரத்திலிருக்கும் தேள் கொட்டினால் அவர்களுக்கு அந்த எண்ணெயின் மருத்துவ குணத்தால் வலி தெரியாது ஆனால் தேளின் விஷம் தோலினுள் ஊடுருவி இருந்தால் சிறது நேரத்துக்குப் பிறகு கொட்டிய இடத்தில் நெறிகட்டிக் கொள்ளும் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மற்றொரு மரத்தில் ஏறும் போதுதான் அதன் உண்மையான வலிதெரியும் அதன் பின் மருத்துவ சிகிச்சை எடுப்பர் தென்னை மரத்தில் ஏறும் போது தேள் கொட்டினால் பனை மரத்தில் ஏறும் போது நெறிகட்டும் என்பதே இப்போது மருவி தென்னை மரத்தில் தேள்கொட்டினால் பனைமரத்தில் நெறிகட்டும் என்னும் பழமொழியாகக் கூறப்படுகிறது

ஆ. ஜான்சி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## படங்களின் தனித்தமிழ்ப் பெயர்கள்

அ. பர்ஸானா
தமிழ் இலக்கியம்
இரண்டாமாண்டு

| படங்கள் | தனித்தமிழ் பெயர் | பேச்சு வழக்கில் | English |
|---|---|---|---|
|  | குமளி ✓ | ஆப்பிள் ✗ | Apple |
|  | கொடி முந்திரி ✓ | திராட்சை ✗ | Grapes |
|  | கிச்சிலி ✓ | ஆரஞ்சு ✗ | Orange |
|  | செந்தாழை ✓ | அன்னாசிப்பழம் ✗ | Pineapple |
|  | முள்நாரி ✓ | டுரியான் ✗ | Durian |

அ. பர்ஸானா
இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு

# தமிழ்த்துறை நிகழ்வுகள்

## சோகா தமிழ்ப் பேரவை : நற்றமிழ்க்குடில் இதழ் வெளியீட்டு விழா


14.09.2018 அன்று தமிழ்த்துறை மாணவியர்களின் சீரியமுயற்சியினால் நற்றமிழ்க் குடில் மாணவ இலக்கிய இதழ் வெளியிடப்பட்டது. இவ்விழாவிற்குச் சிறப்பு விருந்தினர்களாய்ச் சௌத் இந்தியன் போஸ்ட் வார இதழின் ஆசிரியர் தரும. அசோகன் அவர்களும் லயோலா கல்லூரியின் கலை மற்றும் இலக்கியப் பிரிவுப் பேராசிரியர் முனைவர் இரா. காளீஸ்வரன் அவர்களும் வருகை புரிந்தனர்.

இதழாசிரியர் தரும. அசோகன் அவர்கள் நற்றமிழ்க் குடில் இதழை வெளியிட அதன் முதல் பிரதியை பேராசிரியர் முனைவர். காளீஸ்வர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

முதுகலை மாணவி கு. பாரதி வரவேற்புரை வழங்க, தமிழ்த்துறைத் தலைவர் சே. கண்மணி அவர்கள் அறிமுக உரை நிகழ்த்த விழா தொடங்கியது. துறைத்தலைவர் தமது அறிமுகவுரையில் சிறப்பு விருந்தினர்களை அறிமுகப் படுத்தி, மாணவியரின் திறமைகளை வெளியே கொண்டு வரவே இந்த நற்றமிழ்க்குடில் தொடங்கப்பட்டுள்ளது எனவும் சோகாதமிழ்ப் பேரவையின் நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறியது எனவும் கூறினார்.

சிறப்புரையாற்றிய திரு தரும. அசோகன் அவர்கள் நற்றமிழ்க்குடில் இதழ் மேன்மேலும் உயர்ந்திட வேண்டும். வெளிநாட்டுத் தகவல்கள் பலவும் இடம்பெற வேண்டும். உலகளாவிய நிலையில் நற்றமிழ்க்குடில் வளர்ச்சி பெற வேண்டும் எனத் தமது கருத்தைப் பதிவு செய்தார். தொடர்ந்து பேசிய இரா. காளீஸ்வரன் அவர்கள் தமது உரையை நகைச்சுவை உணர்வோடு ஆரம்பித்தார். தனது ஆம் வயதில் கேள்வி என்ற இதழினைத் தொடங்கி கல்லூரிப் படிப்புவரை நடத்தியதாகக் கூறினார். பின்னர் நற்றமிழ்க் குடில் பெரிய அளவில் வளர்ச்சி பெறவேண்டும் என்றும் வாழ்த்தினார்.

பின்னர்க் கல்லூரி முதல்வர் ம. சம்ஷாத் மற்றும் துணைமுதல்வர் மீராமுருகேஷ் அவர்களும் இதழினைப் பெற்றுக்கொண்டு தமிழ்த்துறை மாணவியரின் ஆர்வமிகு இச்செயல்பாட்டினை வாழ்த்தி மகிழ்ந்தனர்.




# சோகாதமிழ்ப் பேரவை மாத ஆய்வரங்கம்

தமிழ்த்துறையில் சோகா தமிழ்ப்பேரவையின் சார்பாக மாதந்தோறும் நடைபெறும் மாணவர்களுக்கான ஆய்வரங்கம் 14.09.2018 அன்று மதியம் 1 மணியளவில் நடைபெற்றது. ஆய்வரங்கத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி சே. கண்மணி, தமிழ்த்துறை உதவி பேராசிரியர்கள் மற்றும் மாணாக்கியர் கலந்துகொண்டனர். இவ்வாய்வரங்கில் தமிழ்த்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் தே. இராணி எலிசபெத் அவர்கள் தலைமையேற்றும் கட்டுரை வழங்கியும் சிறப்பித்தார். மேலும் முதுகலைத் தமிழ் மாணாக்கியரான செ. நிரஞ்சனி, பெ. விஜயலட்சமி, மு. சத்யா ஆகியோர் கட்டுரை வழங்கி ஆய்வரங்கத்தைச் சிறப்பித்தனர்.

மு. சத்யா
முதுகலைத் தமிழ் முதலாமாண்டு




நற்றமிழ்க்குடில் வெளியீட்டு விழா




ஆய்வரங்கம்





ர. லாவண்யா
இளங்கலைத் தமிழ் முதலமாண்டு



மு. துர்கா
முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு